[*1994 நவம்பர் 7*

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிவகாசிக்கு வருகை தந்தபோது குழந்தைத் தொழிலாளர்களுக்கு என்று தனியாக ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அப்படி குழந்தைத் தொழிலாளர்களை யார் நிறுத்திவிட்டு கல்விக் கூடங்களுக்கு அனுப்புகின்றார்களோ, அவர்களுக்கு எல்லாம் அங்கே சலுகைகள் என்று அறிவித்திருக்கின்ற ஒரு சூழ்நிலையில், இன்றையதினம் திருத்தங்கலானது மிகப் பெரிய ஒரு பேரூராட்சியாக இருந்து அது முனிசிப்பாலிட்டியாக ஆக இருக்கிறது. அங்கே இரண்டு அரசு தொடக்கப் பள்ளிகளும், ஒரு தனியார் தொடக்கப் பள்ளியும் இருக்கின்றன. கிட்டத்தட்ட அரசு தொடக்கப் பள்ளியில் மட்டும் 3 ஆயிரம் சிறார்கள் பயின்று வருகின்றார்கள். அதுபோல தனியார் தொடக்கப் பள்ளியில் 1,500 சிறார்கள் படித்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 50 ஆயிரம் ஜனத்தொகை இருக்கின்ற ஒரு பெரிய ஊராக இருக்கின்ற திருத்தங்கலிலே கூடுதலாக கண்டிப்பாக இரண்டு பள்ளிக்கூடங்கள், அட்லீஸ்ட் ஒன்றாவது தொடங்கப்படுமா எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் முன்மொழிவு தாமதமாக வரப்பெற்றதால் பரிசீலிக்க இயலவில்லை. வரும் ஆண்டில் நிதிநிலை அடிப்படையில் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 37, திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

37—

தொட்டப்பநாயக்கனூர் அம்பேத்கார் நகரில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

17540–திருமதி இரா. பாண்டியம்மாள்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், தொட்டப்பநாயக்கனூர், அம்பேத்கார் நகரில் ஆழ்குழாய்க் கிணறு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

1994 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், தொட்டப்பநாயக்கனூர், அம்பேத்கார் நகரில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டப்பட்டு ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறியிருக்கிறார்கள். எனவே, எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதியான உசிலம்பட்டியிலுள்ள தொட்டப்பநாயக்கனூர், அம்பேத்கார் கிராமத்தில் ஒரு மேல்நிலைத் தொட்டி நிறுவ அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் தமிழகத்தில் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற உன்னத நோக்கோடு (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்களின்பால் பேரன்பும், பெரும் பாசமும் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள், சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு நடைபெறாத காரியங்களை எல்லாம் நடத்த வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு, அந்த மக்களுக்காக, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்காக, அடிப்படை வசதிகளான மனைப்பட்டா, குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி எல்லாம் செய்து தர வேண்டுமென்று எந்த முதலமைச்சரும் செய்யாத காரியமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, அந்தக் குழுவிற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராக்கி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரை உறுப்பினராகவும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரை உறுப்பினர்ாகவும், என்னையும் உறுப்பினராகச் சேர்த்து, இந்த உயர்மட்டக் குழுவின் மூலம் அந்த அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து தர இருக்கிற காரணத்தால் இந்தக் கோரிக்கையை அதாவது *1995* டிசம்பர் மாதத்திற்குள்ளாக நிறைவேற்ற வேண்டுமென்ற அழுத்தமான இந்த உத்தரவிற்கு இணங்க, அனைத்து அமைச்சர்களும் ஆங்காங்கே சென்று, ஆதி திராவிட

மக்களின் குறைகளை, கோரிக்கைகளைக் கேட்டறிந்து, நிவர்த்தி செய்ய வேண்டுமென்று எந்த முதலமைச்சரும் செய்யாத அளவுக்கு, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாண்டியம்மாள் அவர்களின் கோரிக்கையை சம்பந்தப்பட்ட துறைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-55*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்38, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

38—

ஆறுகாணி, பத்துகாணி நிரப்பு ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்தல்

20244–திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழங்குடி மக்கள் வாழும் ஆறுகாணி-ஒருநூறாம் வயல், ஆறுகாணி-பத்துகாணி நிரப்பு போன்ற ஒன்றியச் சாலைகளை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் ஏறத்தாழ 18 ஆயிரம் மக்கள் தங்குகிறார்கள். அவர்கள் வசிக்கும் இரண்டு கிராமங்களைச் சேர்க்கும் ஒரு பாலம் வெஸ்டர்ன் காட் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கட்டியிருந்தார்கள். அது 1984 வெள்ளத்திலே அழிந்துவிட்டது. முழுவதும் அழிந்துவிட்டது. ஹைவேசில் கேட்டால், அதற்கு 'நார்ம்ஸ்' இல்லை என்று சொல்லி, கட்டவில்லை. அந்த மக்கள், பத்துகாணி நிரப்பு என்ற பகுதியிலிருந்து வருவதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அதனால் மேற்கு மலைத்